## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!



15 - 12 -2025

**புதுடெல்லி, டிச. 16 -**
**நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத்தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று முன்தினம் (15.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:**

### 1. பெருநிறுவன CSR நிதி -செலவினத்தில் சமச்சீரற்ற நிலை ஏன்?

**டி.ஆர்.பாலு**



கடந்த ஐந்து ஆண்டுகளில், பெருநிறுவனங்கள் சட்டம், 2013-இன் கீழ் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் நலத்திட்ட நடவடிக்கைகளுக்காகத் தேவையான தொகையைச் செலவிடாத பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட நிறுவனங்களின் விவரங்களை மக்களவையில் திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியை நலத்திட்ட நடவடிக்கைகளுக்காகச் செலவிடுவது தொடர்பான கட்டாய விதிகளை அமல்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் உத்தரபிரதேசத்தின் கௌசாம்பி, மௌ மற்றும் பல்லியா மாவட்டங்களிலும், மேற்கு வங்காளத்தின் ஜாங்கிபூரிலும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் நிறுவனங்களால் நலத்திட்ட நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட துறைகள் மற்றும் நிதியின் அளவு குறித்த விவரங்கள் என்ன?

இந்த மாவட்டங்களில் நிதி செலவிடப்படாததற்கு/குறைவாகச் செலவிடப்பட்டதற்கான காரணங்கள் என்ன?

2020 ஆம் ஆண்டு முதல் பெருநிறுவன சமூகப் பொறுப்புப் பங்களிப்புகள் மூலம் ஆதரிக்கப்பட்ட அரசாங்கத் திட்டங்கள் உட்பட, பெருநிறுவன சமூகப் பொறுப்புச் செலவினங்களின் விவரங்கள் மற்றும் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிதியைச் சமமாகப் பகிர்வதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

2020 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாத, காலாவதியான அல்லது "பயன்படுத்தப்படாத பெருநிறுவன சமூகப் பொறுப்பு கணக்கிற்கு" மாற்றப்பட்ட மொத்த நிதியின் அளவு, ஆண்டுவாரியாக மற்றும் அதற்காகத் தண்டிக்கப்பட்ட நிறுவனங்களின் விவரங்கள் என்ன? என்றும் டி. ஆர். பாலு எம்.பி. கேட்டுள்ளார்.

### 2. தேசிய சிறுபான்மையினர் ஆணையத்திற்கு தலைவர் நியமனம் செய்யாதது ஏன்?

**திருச்சி சிவா**



தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் தற்போதைய தலைவர் நியமனத்தில் ஏற்படும் தாமதத்திற்கான காரணம் கேட்டு திமுக எம்.பி. திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் ஏப்ரல் 2025 முதல் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தில் கூட்டங்கள் நடைபெறாதது ஏன் என்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் கடைசி ஆண்டு அறிக்கையின் விவரங்கள் கேட்டும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் 2014 முதல் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டு அறிக்கை மீதான நடவடிக்கை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும் நினைவூட்டி ஏன் என கேட்டுள்ளார்.

### 3. தமிழ்நாட்டில் முன்மொழியப்பட்ட மெட்ரோ ரயில் திட்டங்களின் நிலை என்ன?

**ஆர். கிரிராஜன்**



20 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகைக் கொண்ட ஆக்ரா (16 லட்சம், பாட்னா(17 லட்சம்) மற்றும் போபால் (18 லட்சம்) போன்ற இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நடைமுறையில் இருக்கும் நிலையில் குறைந்த மக்கள் தொகையைக் காரணம்காட்டி, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை ஒன்றிய அரசு நிராகரித்தது ஏன் என்றும் தமிழ்நாட்டிற்கு எதிராக ஒன்றிய அரசின் அலட்சியமான மற்றும் பாரபட்சமான முடிவிற்கான காரணங்கள் என்ன? என்று கேட்டும் தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் ஆ. கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 4. மாற்றுத் திறனாளிகளுக்கு விமானப் பயணத்தை இலகுவாக்க நடவடிக்கை என்ன?

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**



சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் முன்மொழிந்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான திருத்தப்பட்ட விதிமுறைகளின் வரைவு மிக கடுமையானதாக இருப்பதை குறித்து ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவுகள் என்ன என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயண முகவர்கள் அல்லது இணைய தளங்கள் வழியாக பதிவு செய்யும் பயணிகளுக்கு சரியான நேரத்தில் பணத்தைத் திரும்பப் பெறுதல், கட்டணமில்லா மாற்றங்களுக்கான கால அவகாசத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பாதுகாப்புகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை உறுதிப்படுத்த அரசு முன்மொழியும் நடவடிக்கைகள் மற்றும் விமான நிலையங்களில் மாற்றுத் திறனாளிகள் ஸ்ட்ரெச்சர் மற்றும் சக்கர நாற்காலியுடன் விமானத்தில் நுழைய பயன்படுத்தப்படும் ambulifts, இழுத்துச் செல்லக் கூடிய வளைவுப் பாதைகள், குறியீடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட சக்கர நாற்காலி வசதிகள் உள்ளடக்கிய பயண வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 5. பட்டியல் வகுப்பினர் மற்றும் பெண்களுக்கு வங்கிக் கடன்கள் முறையாக வழங்கப்படுகின்றனவா?

**ராஜாத்தி சல்மா**



கடந்த மூன்று ஆண்டுகளில், பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ் மாநில வாரியாக அனுமதிக்கப்பட்ட வங்கிக் கடன்களின் மொத்தத் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் பட்டியல் வகுப்பினர்/பழங்குடியினர் மற்றும் பெண்கள் எத்தனை சதவீதம் பேர் பலன் பெறுகின்றனர் என்றும் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கடன்கள், வழங்கப்பட்ட தொகை மற்றும் விளிம்புப் பண மானியங்கள் குறித்த விவரங்கள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 6. துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான யுஜிசி வரைவு விதிமுறைகள் 2025ஐ திரும்ப பெறுக!

**தஞ்சாவூர் முரசொலி**



துணைவேந்தர்கள் நியமனத்தில் மாநில சுயாட்சியில் தலையிடும் யுஜிசியின் 2025 ஆம் ஆண்டுக்கான வரைவு விதிமுறைகளைத் திரும்பப் பெறக் கோரி தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை ஒன்றிய அரசு கருத்தில் கொள்ளாதது ஏன் என திமுக எம்.பி. முரசொலி கேள்வி எழுப்பியுள்ளார்.

கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதால் விதிமுறைகளை இறுதி செய்வதற்கு முன்பு மாநில அரசுகளுடன் முறையான கலந்தாலோசனைகள் நடத்தாதது ஏன்? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 7. முத்ரா கடன் வழங்குதலை தொடருமா ஒன்றிய அரசு?

**கள்ளக்குறிச்சி மலையரசன்**



பிரதமரின் முத்ரா திட்டம் முதல் தலைமுறை தொழில்முனைவோரிடையே வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து திமுக எம்.பி. மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். முத்ரா கடன்களின் கீழ், குறிப்பாக பொதுத்துறை வங்கிகளில், சொத்துகள் மீட்கப்படாமல் உள்ளனவா என்றும் கடன் பயன்பாடு, திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் கண்காணிப்பு குறித்த இந்தத் திட்டத்தை மறுஆய்வு செய்யவோ அல்லது மறுசீரமைக்கவோ அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன எனவும் மலையரசன் கேட்டுள்ளார்.

### 8. தமிழ்நாட்டில் சூழலியல் சுற்றுலாவை மேம்படுத்துமா ஒன்றிய அரசு?

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி**



வால்பாறை மற்றும் ஆனைமலைப் பகுதி போன்ற சூழல் மற்றும் மலை சுற்றுலாத் தலங்களை ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் (SDS) அல்லது ஸ்வதேஷ் தர்ஷன் திட்டம் (SDS 2.O) திட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்கு அரசாங்கத்திடன் திட்டங்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செயல்பாடுகள் குறித்து பொள்ளாச்சி எம்.பி. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ்நாட்டில் நிலையான சுற்றுலா மேம்பாட்டிற்கான சாத்தியமான இடங்களைக் கண்டறிய அரசாங்கம் நடத்திய கணக்கெடுப்புகளின் விவரங்கள் என்ன? வேலை வாய்ப்பு மற்றும் உள்ளூர் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக, அத்தகைய இடங்களை பரந்த தேசிய சுற்றுலாச் குழுக்களுடன் ஒருங்கிணைக்க முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 9. கிராமப்புற பெண்களுக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகள் என்ன?

**காஞ்சிபுரம் செல்வம்**



திருவண்ணாமலை சி. என். அண்ணாதுரை எம்.பி.

பிரதமர் கௌசல் விகாஸ் யோஜனா (PMKVY) 4.O திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற மற்றும் வேலை வாய்ப்பு பெற்ற விண்ணப்பதாரர்கள் குறித்த பாலினவாரியான தரவுகளை அரசாங்கம் மாவட்ட வாரியாகப் பராமரிக்கிறதா என திமுக மக்களவை உறுப்பினர்கள் செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை மற்றும் பல்வேறு வேலைப் பணிகளில் வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? காஞ்சிபுரம் மாவட்டத்தில் பயிற்சி பெறுபவர்களின் சேர்க்கை, பயிற்சியை நிறைவு செய்தல், வேலை வாய்ப்பு விகிதங்கள் மற்றும் அவர்கள் பணியமர்த்தப்பட்ட துறைகள் உள்ளிட்ட விவரங்கள்? PMKVY 4.O திட்டத்தின் கீழ், தையல், சுகாதாரப் பராமரிப்பு, தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், அழகு மற்றும் ஆரோக்கியம் மற்றும் தொழில்முனைவு போன்ற பெண்களுக்கான இலக்கு சார்ந்த திறன் மேம்பாட்டு முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா? பின்தங்கிய மற்றும் நகர்ப்புற மாவட்டங்களில் உள்ள PMKVY 4.O மையங்களில் பெண்களின் பங்கேற்பை விரிவுபடுத்து வதற்காக, விடுதி வசதிகள், உதவித்தொகை ஆதரவு மற்றும் உள்ளூர் தொழில்களுடன் ஒப்பந்தங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை? மற்றும் பெண் வேலை வாய்ப்பு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக இந்த மாவட்டங்களில் கூடுதல் பெண்கள் சார்ந்த பயிற்சி மையங்கள் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளதா?

### 10. சுற்றுலாத் துறையை மேம்படுத்த ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

**தர்மபுரி ஆ. மணி**



நாட்டின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய மாநிலங்களின் விவரங்கள் கேட்டு திமுக எம்.பி. ஆ.மணி கேள்வி எழுப்பியுள்ளார், அதன் விவரங்கள்:-

சுற்றுலாத் துறைக்கு மாநிலங்களின் பங்களிப்பை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோல்களின் விவரங்கள் யாவை?

கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் சுற்றுலாத் துறையால் ஈட்டப்பட்ட வருவாயின் விவரங்கள் யாவை?

சுற்றுலாத் துறையில், குறிப்பாக அதன் வளர்ச்சிக்கு அதிகம் பங்களிக்கும் மாநிலங்களில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்கள் யாவை?

சுற்றுலாத்துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் மாநிலங்களுக்கு மத்திய அரசின் திட்டங்கள் அல்லது மானியங்கள் மூலம் ஊக்கமளிக்கப்படுகிறதா?

கலாச்சார மற்றும் பாரம்பரியச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அதிகம் பங்களித்த மாநிலங்களின் விவரங்கள் யாவை?



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளைமுன்னிட்டு, மன்னார்குடி மத்திய ஒன்றிய கழகம் சார்பாக நடைபெற்ற மூத்த தம்பதிகளுக்கு சிறப்பு செய்யும் விழாவில் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா கலந்து கொண்டு தம்பதிகளுக்கு சிறப்பு செய்து, பரிசுப்பொருட்கள் வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார். மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா, அவை;ந்தலைவர் க.தன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் காஞ்சித்துரை மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

## ஐ.நா. மன்றத்தில் இந்தியா தனது மூன்றாம் கட்ட

# காலநிலை மாற்ற இலக்கு அறிக்கையை சமர்ப்பிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!



*புதுடெல்லி, டிச.17-*
*ஐநா மன்றத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா தனது மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்கு (Nationally Determined Contribution) அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இது குறித்த முக்கிய விவரங்க ளைக் கேட்டு, ஒன்றிய சுற்றுச் சூழல் துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வியை எழுப்பினார்.*

*இந்தக் கேள்விக்கு வழக்கம்போல ஆழமான தகவல்கள் எதுவுமின்றி சம்பிரதாயமான பதில்களை அளித்து ள்ளது ஒன்றிய அரசு. குறிப்பாக, இந்த இலக்கை அடைய பாரீஸ் ஒப்பந்தத்தின் படி வளர்ந்த நாடுகளிடம் இருந்து பெறப்படவுள்ள நிதி பற்றி மூச்சுக்கூட விடாமல் தவிர்த்துள்ளது.*

*இன்னும் இறுதிசெய்யப்படாமல் இருக்கும் காலநிலை மாற்ற அறிக்கை:*

*தற்போதைய அறிக்கை, 2035 வரைக்குமான மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்குகளை அறிவிப்பது. முதல் இரண்டு கட்டங்கள், 2015 - 2030, 2020 - 2030.*

*இதைச் சமர்ப்பிப்பதற்கான கெடு, இந்த ஆண்டு இறுதியோடு முடிவடைகிறது. ஆனால், இந்த அறிக்கையை இன்னும் இறுதி செய்யாமல் இருப்பதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. இது நிர்வாகத் தாமதம் மட்டுமல்ல, தனக்கிருக்கும் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் போக்கு.*

*காலநிலை நிதி குறித்து பதில் அளிக்க முற்றிலும் மறுப்பு:*

*காலநிலை மாற்ற இலக்குகள், பெரும் நிதித் தொகை கொண்டு எட்டப்பட வேண்டியவை. இது வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதிச்சுமை ஏற்படுத்தும் என்பதற்காக, காலநிலை மாற்றத்திற்கு காரணமாக அமைந்த வளர்ந்த நாடுகள் நிதியளிக்க வேண்டும் என்று பாரீஸ் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது.*

*இந்த தொகை இந்தியாவுக்கு நியாயப்படி வர வேண்டியது. தற்போது மூன்றாம் கட்ட இலக்கிற்கும் அது வரவேண்டும். இந்த தொகையாக எவ்வளவு நிர்ணயிக்கப்படப் போகிறது என்ற கேள்வியை ஒன்றிய அரசு தவிர்த்துள்ளது. மேலும், இப்படி பெறப்படும் தொகையை சரியாக திட்டங்களுக்கு செயல்படுத்தப்படுத்துவதை கண்காணிக்க அமைப்புகளை உருவாக்குவதைப் பற்றியும் பதிலளிக்க மறுத்துள்ளது.*

*இது அலட்சியம் மற்றும் மோசமான நிர்வாகத்தின் எடுத்துக்காட்டு.*

*கெடு நெருங்கி வரும் நிலையில், மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்குகள் குறித்த அறிக்கையை விரைவில் இறுதிசெய்ய வேண்டும். அதில் வளர்ந்த நாடுகளிடம் இம்முறை கேட்கப்போகும் நிதி எவ்வளவு என்பது குறித்தும், அவற்றை திட்டங்களுக்கு பயன்படுத்துவதை கண்காணிக்க ஏற்படுத்தவுள்ள அமைப்பு குறித்தும், ஒன்றிய அரசு வெளிப்படையாக பேச வேண்டும்.*

*இவ்வாறு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.*



கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்ற 80 மாணவ, மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் ஊக்கத்தொகை மாவட்ட அமைப்பாளர் பிரெண்ட்ஸ் ரமேஷ், வீரபாண்டி ஒன்றிய தெற்கு செயலாளர் வெண்ணிலா சேகர் வழங்கினர். இவ்விழாவில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏற்காடு ரமேஷ், பாபு, செல்வகுமார், ஒன்றிய அமைப்பாளர் சின்ராஜ், துணை அமைப்பாளர்கள் கேசவன், ரமேஷ், அருள், சூர்யா, லோகேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆயிரம் விளக்கு

# க.அன்பழகன் மறைவு!

சென்னை, டிச. 17 –
சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்ட அவைத் தலைவர் புதுப்பேட்டை க.அன்பழகன் (வயது 63) அவர்கள் 14.12.2025 – ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணியளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், 118 வது வட்டக் கழகச் செய லாளர் கோ.யுவராஜ், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (16.12.2025 – செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 1:30 மணி அளவில், அன்னாரின் இல்லமான எண். 47/10, பி.வி.கோயில் முதல் தெரு, (மாரிஸ் ஹோட்டல் எதிரில்) இருந்து புறப்பட்டு மயிலை இடுகாட்டில் தகனம் செய்யப் பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை கே.கே. நீலமேகம்

**டிசம்பர் 17 (1965)**



**சுயமரியாதை இயக்க காலந்தொட்டு சீர்திருத்த பெரும் பணியாற்றியவர். 'குடந்தை பெரியார்' என அழைக்கப்பட்டவர்.**

**நீண்டகாலம் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி துணைத் தலைவராக இருந்தவர்.**

**தி.மு.கழகத்தின் துவக்க காலத்தில் பொருளாளர் பொறுப்பேற்றிருந்தவர்.**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற மதிப்பும், பாசமும் கொண்டிருந்தவர்.**

**"தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த தங்கம் – தன்மான இயக்கத்தின் தலைதாழாச் சிங்கம் – குடந்தைப் பெரியார் நீலமேகம் அவர்கள் மறையவில்லை; மனதில் நிறைந்துவிட்டார்" என தலைவர் கலைஞர் அவர்களால் 'முரசொலி' தலையங்கத்தில் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.